பக்கங்கள் - 10

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 19 சனிக்கிழமை (02.05.2020)







## பொலிஸார் மூர்க்கத்தனமான தாக்குதல் இரண்டு பெண்கள் உட்பட மூவர் படுகாயம்

### வடமராட்சி கிழக்கு குடத்தனையில் சம்பவம்







(கரணவாய்)

பொலிஸாரின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக் 02

## மே மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை

### நாடு முழுவதும் ஊரடங்கு

(கொழும்பு)

மே மாதம் 6ஆம் திகதி புதன் கிழமை இரவு 8 மணி முதல் 11ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை 02

## 700ஐ நெருங்கியது

(கொழும்பு)

நாட்டில்பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கடற்படையினரின் எண்ணிக்கை 275 வரை அதிகரித்துள்ள நிலையில், இலங்கையில் 02

## கேப்பாபுலவு தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த

# இரு முதியவர்கள் நேற்று திடீர் மரணம்

### கொரோனா சந்தேகத்தில் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

*(முல்லைத்தீவு) முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த இரு முதியவர்கள் நேற்று திடீரென உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் சந்தேகத்தில் இவர்களது இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (02ஆம் பக்கம் பார்க்க)*

## தரம் 10 – 13 வரை முதல் கட்டமாக பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதும் பாடசாலைகளை இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்க கலந்துரையாடப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 02

### முகமூடி அணிந்த வாள்வெட்டுக் குழு

## ஊரடங்கு வேளை நீர்வேலியில் மூன்று வீடுகளில் கொள்ளை

(கோப்பாய்)

நீர்வேலியில் ஊரடங்கு அமுலிலிருந்த வேளையில் முகமூடி அணிந்து வாள்களுடன் சென்ற நான்கு பேர் கொண்ட கும்பல் வீட்டிலிருந்தவர்களைக் கடுமையாக அச்சுறுத்தியும் தாக்கியும் மூன்று வீடுகளில் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளது.

குறித்த கொள்ளைச் 02

## யாழில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களில்

### மேலும் மூவர் குணமடைந்து வீடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களில் மேலும் மூவர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். 02

### யாழ்.போதனாவில்

## திங்கள் முதல் கொரோனா பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா 02

### அனைத்துக் கட்சி கூட்டமே பொருத்தமானது

## அலரி மாளிகைக்கு வருமாறு மகிந்தவின் அழைப்பை நிராகரித்த ஜே.வி.பி

(கொழும்பு)

எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை அலரி மாளிகையில் நடக்கவிருக்கும் கலந்துரையாடலுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நிராகரித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தமது நிலைப்பாட்டை விளக்கி நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனு 02

### பொதுத் தேர்தலை ஒத்தி வைக்க

## உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதியன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பாராளுமன்றத் தேர்தலை ஒத்தி வைக்குமாறு உத்தரவிடக் கோரி உயர்நீதி 02

### யாழ்.போதனாவில் சேர்க்கப்பட்ட

## மற்றொரு நபருக்கு கொரோனா உறுதி

முழங்காவில் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர் 02

## முகக்கவசம் அணிந்தால்தான் 'ஊரடங்கு பாஸ்' செல்லுபடியாகும்

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள ஊரடங்கு சட்ட அனுமதிப் பத்திரங்கள் சாரதிகள் மற்றும் வாகனங்களில் பயணம் செய்வோர் முகக் கவசங்கள் அணிந்திருந்தால் மட்டுமே செல்லுபடியாகும் என்று ஜனாதிபதி செயலகம் 02

## அலரி மாளிகை...

ப்பி வைத்துள்ளார்.

அதில், ஜே.வி.பியின் எம்.பிக்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அனர்த்தத்தை வெற்றி கொள்ள அரசியலமைப்பின்படி செயற்பட்டு ஆணை கோருவதற்கும், நிலைமை குறித்து விவாதிப்பதற்கும் பதிலாக மகிந்தவின் இல்லத்தில் 225 எம்.பிக்களும் கூடி பலனில்லையென்பதை அநுரகுமார சுட்டிக் காட்டியுள்ளார்.

கொரோனா நிலைவரத்தை சமாளிப்பது, மக்களிற்கு நிவாரணம் வழங்குவது பற்றி ஆராய ஜனாதிபதி, பிரதமரின் தலைமையில் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதே பொருத்தமானது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அலரி மாளிகைக்கு 225 எம்.பிக்களையும் அழைத்து பேசி, அரசியலமைப்பு நெருக்கடியை தீர்க்க முடியாது.

எனவே, அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும் அல்லது இது போன்ற நெருக்கடிகளில் ஜனாதிபதி எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து உயர்நீதி மன்றத்தில் கருத்து கேட்க வேண்டுமென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## ஊரடங்கு வேளை...

சம்பவம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு நடந்துள்ளது.

வீடொன்றில் மூன்று இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணமும் இன்னொரு வீட்டில் இரண்டு பவுண் தங்கச் சங்கிலிகள் இரண்டும் மற்றொரு வீட்டில் துவிச்சக்கரவண்டியொன்றும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18)

## திங்கள் முதல்...

வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாக உள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கொரோனா தொற்று தொடர்பான பரிசோதனைகள் முன்னர் அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் நீண்ட முயற்சிகளின் பலனாக யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பரிசோதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் கொரோனா பரிசோதனையை அதிகரிக்கும் நோக்கில் யாழ் போதனா வைத்தியசாலையிலும் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல முயற்சிகளை முன்னெடுத்து வந்தோம். அதற்கான பலன் தற்போது கிடைத்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் பரிசோதனைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.

இதனூடாக நாளொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என நம்புகின்றோம் என்றார். (ம-3)

## யாழில் கொரோனா...

வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூவர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

ஏற்கெனவே 6 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் இவர்களுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 9 பேர் குணமடைந்துள்ளனர். (ம-3)

## உயர் நீதிமன்றில்...

மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சரித்தா மைத்ரி குணரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதியின் செயலாளர், சட்டமா அதிபர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளரால் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்பதால் அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்றும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாத காலத்துக்குள் தேர்தலை நடத்தாமல் விடுக்கப்பட்ட தேர்தல் புதிய திகதி அறிவிப்பு சட்டவிரோதமானது என்றும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## பொலிஸார் மூர்க்...

கிழமை குடத்தனை, மாளிகைத்திடல் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்ற பருத்தித்துறை பொலிஸார் அங்குள்ள ஹன்டர் கனரக வாகனம் ஒன்று சட்டவிரோதமான முறையில் அன்றைய தினம் மணல் அகழ்வில் ஈடுபட்டதாகத் தெரிவித்து வீட்டிலிருந்த ஹன்டர் ரக வாகனத்தை பருத்தித்துறை பொலிஸார் எடுத்துச் செல்ல முற்பட்ட சமயம் அங்கிருந்த பொதுமக்களுக்கும் பருத்தித்துறை பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனை அங்கு நின்ற ஒருவர் கைத் தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதனை அவதானித்த பொலிஸார் கைத் தொலைபேசியினை பறித்துள்ளனர்.

பொது மக்களின் எதிர்ப்பை அடுத்து கைத்தொலைபேசியை உரியவரிடம் கொடுத்து விட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர் பருத்தித்துறை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மீண்டும் அங்கு சென்று ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைபேசியை தருமாறு கூறி அப்பகுதியில் நின்றவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதில் பொலிஸாரின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மூர்ச்சையற்று காணப்பட்டனர்.

இதனை அடுத்து 1990 அம்புலன்ஸ் வண்டிக்கு அவசர அழைப்பு ஏற்படுத்தப்பட்டதை அடுத்து பொலிஸாரினால் தாக்கப்பட்ட மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளையில் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டமை அப்பகுதி மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் படுகாயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, வைத்திய சாலை அனுமதிப் பத்திரத்துடன் உணவு எடுத்துச் சென்ற இரு பெண்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 24 மற்றும் 26 வயதுடைய பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடத்தனையில் இருந்து மந்திகையில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்குச் செல்லும் வழியில் மாவடிச் சந்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

(ம-3,60,114)

## இரு முதியவர்கள்...

நேற்றுக் காலை கேப்பாபுலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண் காணிக்கப்பட்டு வந்த நிலையில் கொழும்பினை சேர்ந்த 80 வயதுடைய வேலு சின்னத்தம்பி என்பவர் நெஞ்சுவலி காரணமாக நேற்று தனிமைப்படுத்தல் முகாமில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இவரை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் எடுத்து சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இவரின் மாதிரிகள் பரிசோதனைக்காகவும் உயிரிழப்பு தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மாலை 5.00 மணியளவில் கேப்பாபுலவு விமானப்படைத்தள கண்காணிப்பு நிலையத்தில் இருந்து 80 வயதுடைய மதிக்கத்தக்க மற்றும் ஒருவர் உயிரிழந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனை கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இருவரின் உயிரிழப்புக்கள் தொடர்பில் சடலங்களிலிருந்து மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த இருவர்களின் உடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர்களின் உயிரிழப்பு தொடர்பிலான முழுமையான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. (ம-3,281)

## முகக் கவசம்...

அறிவித் துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று இரவு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில், நாளாந்த இயல்பு வாழ்க்கை மற்றும் நிறுவன செயற்பாடுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் மே 11 திங்கள் ஆரம்பமாகும்.

இம்மாவட்டங்களில் அத்தியாவசிய சேவைகளை தொடருதல் உள்ளிட்ட இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் திங்கள் முதல் திறக்கப்பட வேண்டும். சேவைகளின் தேவையை கவனத்திற்கொண்டு அதற்குத் தேவையான திட்டங்களை இப்போதிருந்தே தயாரிக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களை திறந்து பணிகளை மேற்கொள்ளும்போது கோவிட் - 19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் வழங்கியுள்ள வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றுவதை நிறுவனத் தலைவர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் சேவைக்கு அழைக்கப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சேவைக்கு யாரை அழைப்பது என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க முடியும். தனியார் துறை நிறுவனங்களை திறக்கும் நேரம் காலை 10.00 மணி என உத்தரவிடப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் அநாவசியமாக வீதிகளுக்கு வருதல் மற்றும் ஏனைய இடங்களில் ஒன்றுகூடுவதை நிறுத்த வேண்டும். போக்குவரத்து சபை பேருந்துகள் மற்றும் தொடருந்துகளில் பயணிகள் போக்குவரத்து தொழிலுக்காக செல்வோருக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

கட்டாயமாக தொழிலுக்கு சமுகமளிக்க வேண்டியவர்கள் தவிர ஏனைய மக்கள் நோய் நிவாரணத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வீடுகளில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உணவு, மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மட்டுமே எவரும் வீடுகளில் இருந்து வெளியில் செல்ல வேண்டும். இந்த அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான சுகாதார பரிந்துரைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மே 06, புதன் வரை நடைமுறைப்படுத்தப்படுவது முன்னர் போன்று இரவு 8.00 மணி முதல் மறுநாள் அதிகாலை 5.00 மணி வரையாகும்.

இம்மாவட்டங்களில் மே 06, புதன் இரவு 8.00 மணிக்கு பிறப்பிக்கப்படும் ஊரடங்கு சட்டம் மே 11 திங்கள் அதிகாலை 5.00 மணி வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றுள்ளது. (ம-3)

## 6ம் திகதி தொடக்...

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## மற்றொரு நபரு...

முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உள்ளமை பி.சி.ஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து கடந்த இரு நாட்களுக்கு முன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஜாஎலயைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவருக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று மற்றொருவருக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## முதல் கட்டமாக...

தரம் - 10 தொடக்கம் தரம் - 13 வரை முதல் கட்டமாக ஆரம்பிக்கத் திட்டமிடப்படுவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"கொரோனா தொற்றுப் பரவலைத் தொடர்ந்து மார்ச் மாதம் 13ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளுக்கும் கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட வேண்டும். அத்துடன், ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கிருமித் தொற்று நீக்கி விசிறப்படவேண்டும்.

அனைத்து தரங்களுக்கும் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படாது. தரம் 10 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மீண்டும் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடங்கப்படும். தேசிய மட்டப் பரீட்சைகளை எதிர்கொள்ளும் வகைகள் அவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும்" என்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மீள்திருத்த விண்ணப்பங்கள் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 700ஐ...

இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 700ஐ நெருங்கியுள்ளது.

நேற்று இரவு 9.00 மணியுடன் நிறைவடைந்த 12 மணி நேரத்தில் மட்டும் நாட்டில் 27 புதிய தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில் இலங்கையில் கண்டறியப்பட்ட மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 690 ஆக உயர்ந்தது. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

### வைரஸ் தொற்று மேலும் அதிகரித்தால்

# 6 ஆயிரம் கொரோனா சோதனை தினந் தோறும் நடாத்த நேரிடும்

## தொற்று நோயியல் பிரிவு சுகாதார அமைச்சரிடம் அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவினால் தினமும் ஆறாயிரம் பீ.சீ.ஆர். பரிசோதனைகளை நடாத்த நேரிடும் என தொற்று நோயியல் பிரிவு, சுகாதார அமைச்சரிடம் அறிவித்துள்ளது.

எதிர்வரும்நாட்களில் வைரஸ் தொற்று பரவுகை அதிகரித்தால் இவ்வாறு அதிகளவில் பரிசோதனை நடாத்த நேரிடும் என தெரிவித்துள்ளது.

தற்பொழுது அரசாங்க தனியார் துறைகளைச் சேர்ந்த 15 ஆய்வு கூடங்களில் பீ.சீ.ஆர் பரிசோதனைகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுகூடங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு பற்றாக்குறையின்றி போதியளவு பாதுகாப்பு அங்கிகள், சாதனங்களை வழங்குமாறு சுகாதார அமைச்சர், அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கொரோனாவை கட்டுப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட விசேட செயலணி நேற்றைய தினம் கூடிய போது இந்த கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### மூதறிஞர்

## சபாரத்தினம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த வித்தகர் மூதறிஞர் ஆ.சபாரத்தினம் மாஸ்ரர் நேற்றுக் காலமானார்.

தமிழ் இலக்கண இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்த ஆ.சபாரத்தினம் மாஸ்ரர் சைவ சித்தாந்தம் மற்றும் மெய்யியல்சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் ஆய்வுப் பணிகளுக்கு பேருதவியாற்றியவர்.

சுவீடன் பல்கலைக்கழகத்தில் தகைசார் ஆய்வாளராக கௌரவிக்கப்பட்ட இவர் மௌனமுனி கைலாசபதி அவர்களின் நூல்களை அச்சேற்றுவதில் பெரும் பங்காற்றியவர்.

நாரந்தனையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் கரம்பன் சண்முகானந்தா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றியிருந்தார்.

இவரின் அறிவாற்றலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெசாக்கை தவிருங்கள்

(கொழும்பு)

நாட்டில் காணப்படும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இம்முறை வெசாக் வலயங்கள் அமைத்தல், தானசாலைகள் அமைத்தல் மற்றும் வெசாக் தோரணங்களை காட்சிப்படுத்தல் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 690 | 162 | 07 | 521 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 3,372,285 | 1,070,792 | 238,084 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 3,372,285 | +68,364 | 238,084 | +4,260 |
| ஐ.அமெரிக்கா | 1,114,556 | +19,533 | 65,019 | +1,163 |
| இத்தாலி | 207,428 | +1,965 | 28,236 | +269 |
| ஸ்பெய்ன் | 242,988 | +3,648 | 24,824 | +281 |
| சீனா | 82,874 | +12 | 4,633 | 0 |
| ஜேர்மனி | 163,759 | +750 | 6,662 | +39 |
| பிரான்ஸ் | 167,346 | +168 | 24,594 | +218 |
| ஈரான் | 95,646 | +1,006 | 6,091 | +63 |
| ஐ.இராச்சியம் | 177,454 | +6,201 | 27,510 | +739 |
| இந்தியா | 35,043 | +180 | 1,154 | 0 |

இன்று அதிகாலை 12.45 நிலைவரப்படி

# கொரோனா தொற்று சந்தேகம்

# யாழில் கடமையாற்றும் கடற்படை வீரரின் தந்தை, சகோதரன் மீது தாக்குதல்

## சுகவீனமுற்ற குழந்தைக்கு மருந்து வாங்க சென்ற போது குருநாகலில் சம்பவம்

(குருநாகல்)

குருநாகல் வாரியபொல நெட்டிய பிரதேசத்தில் கடற்படை வீரர் ஒருவரின் தந்தை மற்றும் அவரது சகோதரர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த இருவரும் வாரியபொல ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற்படை முகாமில் கடமையாற்றும் குருநாகல் வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படை வீரரின் குழந்தை சுகயீனமுற்றிருந்ததால், அதற்கு தேவையான மருந்தைக் கொள்வனவுச் செய்வதற்காக குறித்த இருவரும் மருந்தகம் ஒன்றிற்கு சென்றபோதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்விருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எனச் சந்தேகித்து, சிலர் தாக்குதலை மேற்கொண்டனர் என பாதிக்கப்பட்ட இருவரும் தெரிவித்துள்ளனர்.

கடற்படை வீரர் அவரது வீட்டுக்கு இதுவரை வரவில்லை என்றும் அத்துடன் அவர் கொரோனா தொற்றாளராக அடையாளங் காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்ய பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-3)

# வவுனியா செட்டிக்குளத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

(வுவனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இளைஞரொருவரை கசிப்பு உற்பத்திக்கான பொருட்களுடன் கைது செய்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை செட்டிகுளம் பெரியகுளம் 10 ஆம் கட்டை பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் சிலர் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரதீப் குமார் தலைமையிலான பொலிஸ் குழு சோதனையில் ஈடுபட்டபோதே குறித்த பொருட்களை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 54ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் 3 போத்தல் கசிப்பு மற்றும் பரல்களுடன் வீரபுரத்தை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனையும் கைது செய்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3.299)

# மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## கிண்ணியாவில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா கண்டல் காடு கிராமத்தில், மாடு மேய்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை மின்னல் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா காக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான முகம்மது பாரூக் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் கிண்ணியா வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

### யாழில் கடந்த ஒன்றரை மாதத்தில்

# பொலிஸாருக்கு எதிராக ஒன்பது முறைப்பாடுகள்

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மார்ச் 20 ஆம் திகதியிலிருந்து (இன்று) நேற்று மே முதலாம் திகதி வரை பொலிஸாருக்கு எதிராக 9 முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார்.

அத்துடன் இது வரை 16 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவற்றில் 9 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிரானவை என்றும் அவர் கூறினார்.

குறித்த முறைப்பாடுகள் கோப்பாய், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை மற்றும் பருத்தித்துறை பொலிஸாருக்கு எதிராகவே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்தோடு இராணுவத்துக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை ஆனையிறவு இராணுவ சோதனை சாவடி படையினர் தொடர்பாகவும் மற்றையது பூநகரி பகுதியில் மீன்பிடிக்க சென்றவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாகவும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏனைய முறைப்பாடுகள் சமுர்த்தி நிவாரணம் வழங்கல் தொடர்பில் அதிகாரிகள் மீதான முறைப்பாடுகள் பொதுமக்களால் பதியப்பட்டிருக்கின்றது. பொலிஸாருக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அந்தந்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்தார். (ம-3.114)

# 940 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது

## யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்தில் மக்களுக்கு 940 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த உதவியானது அரசாங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளில் இருந்து பெறப்பட்ட நிதியுதவி மற்றும் உலர் உணவுப் பொருட்களும் உள்ளடங்குவதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 820 மில்லியன் ரூபாய் நிதியானது 448 சிறுநீரக பாதிப்புக்கு உள்ளானவர்களின் குடும்பங்கள் உள்ளடங்கலாக ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 975 குடும்பங் களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவாக வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனைவிட, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 24 மெற்றிக் தொன் கோதுமை மாவினை 11 ஆயிரம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ம-3)

### அரச துறையில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்களை

# மே மாதம் இறுதிவரை இயன்றளவு வேலைக்கு அழைப்பதை தவிர்க்க வேண்டும்

## உள் நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் அரச துறையில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்ப் பாலூட்டும் தாய்மாரை வேலைக்கு அழைப்பதை மே மாதம் இறுதிவரை இயன்றளவு தவிர்க்க வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் அத்தியாவசிய சேவைகளுக்காக அவர்களை பணிக்கு அழைப்பதாக இருப்பின் அருகிலுள்ள பணித் தளத்தில் அவர்களை பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனின் வழிகாட்டலில் வெளியாகியுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமக்கு அருகிலுள்ள அலுவல கங்களில் பணிபுரிய விரும்பும் கர்ப் பிணித் தாய்மார் அது தொடர்பில் தமது திணைக்களத்தின் பிரதானிகளுக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை முன்வைக்க வேண்டும் என அந்த சுற்றறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அவர்கள் தமக்கு அருகிலுள்ள அலுவலகத்தில் பணிபுரிந்தாலும் அதற்கான ஊதியம் அவர்களின் நிரந்தர அலுவலகத்தினாலேயே செலுத்தப்பட வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

# அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குமிடையில்

## இன்று சந்திப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. குறித்த கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 11.15 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் ஒரு அரசியல் கட்சியிலிருந்து ஒரு பிரதிநிதியை மாத்திரம் கலந்து கொள்ளச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல்கட்சிகளிடம் கோரியுள்ளது. (ம-3)

ஒரு மணியைப் போலத்தான் நல்ல செயல்களும் சொர்க்கத்தின் வாசலில் பெரிய ஓசையை எழுப்பும். – ரிச்சர்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முதலிடத்தில் சிவபூமி பாடசாலை சேவைக்குக் கிடைத்த அங்கீகாரம்

சமூக சேவைகள் திணைக்களத்தால் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுய அபிமான திட்ட ஆய்வில், யாழ்ப்பாணம் கோண்டாவிலில் அமைந்துள்ள சிவபூமி மனவிருத்தி பாடசாலை அகில இலங்கையில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை நமக்கெல்லாம் மன நிறைவையும் பெருமையையும் தருவதாகும்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவபூமி அறக்கட்டளை அமைப்பு ஈழத் திருநாட்டில் சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை உலகறிந்ததே.

அந்த வகையில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மனவளம் குன்றிய பிள்ளைகளுக்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

மனவிருத்தி குன்றிய நிலையில் வீடுகளுக்குள் இருந்த பிள்ளைகளை வாரி அணைத்து அவர்களும் சாதனைக்குரியவர்கள் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை வழிப்படுத்தவும் ஆற்றுப்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டதே சிவபூமி மனவிருத்திப் பாடசாலையாகும்.

இலங்கையின் வரலாற்றில் அரச கட்டமைப்பால் கூட இயக்குவது கடினம் என்று கூறக்கூடிய சூழ்நிலையில்,

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கண் வைத்திய நிபுணர் குகதாசன் உள்ளிட்ட சமூகப் பற்றாளர்கள் மற்றும் கொடையாளர்கள் சேர்ந்து கோண்டாவில் மண்ணில் ஆரம்பித்த மனவிருத்திப் பாடசாலை மனவளர்ச்சி குன்றிய எத்தனையோ பிள்ளைகளின் வழித்துணையாக அவர்களை அரவணைக்கும் அன்புக் கரமாக விளங்குகிறது.

மனவளம் குன்றிய பிள்ளைகளையும் வளப்படுத்தி அவர்களையும் சாதனையாளர்களாக ஆக்க முடியும் என்பதை நிரூபித்த பெருமை சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கே உரியது.

ஆம், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் எங்கள் சிவபூமிப் பாடசாலைப் பிள்ளைகள் பங்கேற்று சாதனை படைத்து நம் மண்ணுக்கு உலகப் புகழ் பெற்றுத் தந்தனர்.

வீட்டுவாசலின் எல்லை தாண்ட முடியாமல், வீட்டின் கதவோரம் நின்று எட்டிப் பார்த்து நாங்கள் வெளியில் செல்ல முடியுமா? என்று ஏங்கிய பிள்ளைகளை சிறிஸ் நாட்டுக்கு, அவுஸ்திரேலியாவுக்கு, அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்ற பாபெரும் சாதனைக்குச் சொந்தமான கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை அகில இலங்கையில் 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சுய அபிமானி திட்ட ஆய்வில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை என்பதற்குள்,

அந்தப் பாடசாலையின் கட்டமைப்பு, நிர்வாகத் திறன், அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்புடனான தியாகம் என அத்தனையும் வெளிப்பட்டு நிற்கின்றது.

இஃது ஒட்டுமொத்த இலங்கையின் அங்கீகாரமாயினும் எம்மைப் பொறுத்த வரை இந்த வெகுமதி கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்குக் கிடைத்த இறைவனின் ஆசி என்பதே நம் முடிவு.

## 60 ஆயிரம் லீற்றர் கோடா,10 லீற்றர் கசிப்புடன் பெண் உட்பட ஐவர் பொலிஸாரிடம் சிக்கினர்!

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் கசிப்பு விற்பனை அதிகரித்து வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் பெண் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட குறித்த சுற்றி வளைப்பில் 10 லீற்றர் கசிப்பும் 60 ஆயிரம் லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெருடாவில், மட்டுவில் மற்றும் சரசாலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதைத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐந்து பேரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் மீட்கப்பட்ட 10 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 60 ஆயிரம் லீற்றர் கோடாவும் பொலிஸ் நிலைத்தில் ஒப்படைக்கப்பட்டது. (இ-4)

## கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிக்க இளைஞர்கள் ஒன்றிணைய வேண்டும்

### சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

(கொடிகாமம்)

தென்மராட்சியில் கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிப்பதற்கு இளைஞர்கள் ஒன்றிணைய வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் கோரிக்கை விடுத்தார்.

தென்மராட்சிப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுலிலுள்ள நிலையில் கசிப்பு உற்பத்தி யானது பெருமளவில் இடம்பெறுவது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் மதுபான சாலைகளும் பூட்டப்பட்டிருப்பதன் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் அதாவது மட்டுவில் கெருடாவில், மறவன்புலவு, சரசாலை போன்ற கிராமங்களில் பற்றைகளுக்குள்ளும் ஆட்கள் இல்லாத வீடுகளிலும் கசிப்பு உற்பத்தி பெருமளவில் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பில் நாம் பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸாரால் பெருமளவு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டு அதனோடு சம்பந்தப்பட்டவர்களும் கைது செய்யப்படுகின்றார்கள்.

எனினும் கசிப்பு உற்பத்தி இன்று வரை முற்றாக நிறுத்தப்படவில்லை. எனவே இந்தக் கசிப்பு உற்பத்தியைத் தடுத்து நிறுத்து வதற்கு தென்மராட்சி இளைஞர்கள் பொலிஸாருடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இதன் மூலமே கசிப்பு உற்பத்தியை தென்மராட்சியில் முற்றாக ஒழிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 29 ஆம் திகதி பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின்போது கசிப்பு உற்பத்தியைத் தடுத்து நிறுத்தக்கோரி பிரதேச சபை உறுப்பினரால் விசேட பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் அன்றிரவு குறித்த பிரதேச சபை உறுப்பினரின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்களால் அவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளமைக்கும் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்த தவிசாளர் இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (இ-114)

## புகையிரத சேவைகளை பயன்படுத்துவோருக்கு புகையிரதத்திணைக்களம் முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளுக்காக நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ள புகையிரத சேவைகளில் பயணிக்கவிருக்கும் அரச மற்றும் தனியார் அதிகாரிகள் உரிய நிறுவனங்களின் பிரதானிகள் ஊடாக இணையத்தளம் மூலம் ஆசனங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று புகையிரதத் திணைக்கள அதிகாரி எம்.ஜே.டி.பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை 4 ஆம் திகதி முதல் உரிய நிறுவனப் பிரதானிகளால் வழங்கப்படும் தகவல்களுக்கு அமையவே புகையிரத சேவை இடம்பெறும். அதாவது, புகையிரதத்தில் பயணிக்கவிருப்போர் உரிய நிறுவன பிரதானிகள் மூலம் முன்னரே பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இணையத்தளம் மூலம் (Online) பதிவு செய்பவர்களுக்கு அவர்களது ஆசன விபரங்கள் அவரவர் தொலைபேசி இலக்கங்களுக்கு குறுஞ்செய்தி மூலம் புகையிரத திணைக்கள அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு ஆசனங்கள் பதிவு செய்யப்படாதவர்களுக்குப் புகையிரதத்தில் பயணிக்க முடியாது.

இலங்கைப் புகையிரதத் திணைக்களம் மற்றும் மொபிடெல் இணைந்து ஆரம்பித்துள்ள இணையத்தளம் ஊடாக அடுத்த வாரம் முதல் ஆசனங்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை நிறுவனப் பிரதானிகள் முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## பொலிஸாரின் விடுமுறை இரத்திற்கான காலம் நீடிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இரத்துச் செய்யப்பட்ட விடுமுறைக் காலமானது மேலும் நீடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதன்படி பொலிஸாரின் விடுமுறை இரத்துக் காலமானது மே மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

முன்னர் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை இரத்துக் காலமானது மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் குறித்த விடுமுறை இரத்துக் காலமானது ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி, 30 ஆம் திகதி வரை நீடித்து ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே தற்போது மீண்டும் மே மாதம் 15 ஆம் திகதி வரை அனைத்து பொலிஸாரின் விடுமுறைக்காலமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியது. (இ)

## ஒரு கோடி ரூபாய் ஹெரோயினுடன் மூவர் கைது

(களுத்துறை)

களுத்துறை பகுதியில் ஒரு கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடவல பகுதியில் நேற்று அதிகாலை 3.20 மணியளவில் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது சந்தேகத்திற்கிடமான கார் ஒன்றை அவதானித்த புலனாய்வுப் பிரிவினர் அதனைச் சோதனைக்குட்படுத்தினர். இதனைத் தொடர்ந்து 700 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதை அடுத்து காரில் பயணித்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து மடவல பகுதியில் சந்தேக நபர்கள் வாடகைக்கு பெற்றுத் தங்கி வந்த வீட்டிலிருந்த 300 கிராம் ஹெரோயினும், 9 மில்லி மீற்றர் ரக உள்நாட்டு ரிவோல்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டதுடன், மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாணந்துறை, பண்டாரகம மற்றும் மொரட்டுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21, 27, 29 ஆகிய வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன், சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மன்னாரில் மினி சூறாவளி வீடுகள் சேதம், மக்கள் பாதிப்பு





(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய மடு கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கடும் மழையினால் 4 வீடுகள் சேதமடைந்துள்ளதோடு, தோட்டச் செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் பெரிய மடு கிராமத்தில் இடி மின்னல் தாக்கத்துடன் கூடிய மழையினால் வீடு ஒன்று பகுதி அளவில் சேதமடைந்துள்ளதோடு, அக்கிராமத்தில் ஏற்பட்ட மினி சூறாவளி தாக்கத்தினால் மூன்று வீடுகள் பாரிய அளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் குறித்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பப்பாசி செய்கை முழுமையாக பாதிப்படைந்துள்ளதோடு, பலாமரம், வாழைமரம் போன்றனவும் சேதமடைந்துள்ளன. இதனால் சுமார் 17 குடும்பங்கள் வரை பாதிப்படைந்துள்ளன

இதையடுத்து குறித்த பகுதிக்கு சென்ற அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(இ -4-285)

# சுற்றுலா விடுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட நகரசபை தவிசாளர் உட்பட 7 பேர் கைது

(ஹற்றன்)

தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறும் வகையில் கினிகத்தேனை பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட நாவலப்பிட்டி நகரசபைத் தவிசாளர் உட்பட 7 பேர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர்.

ஹற்றன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில், வட்டவளை மற்றும் கினிகத்தேனை பொலிஸார் இணைந்து குறித்த சுற்றுலா விடுதியை சுற்றிவளைத்தனர்.

பொலிஸாரின் முற்றுகையையடுத்து அங்கிருந்து சிலர் தப்பியோடியுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கான தேடுதல் வேட்டை தொடர்கிறது.

சூதாட்டத்துக்காக பயன்படுத்தப்பட்ட 60 ஆயிரம் ரூபாய் பணம் மதுபான போத்தல்கள், நகரசபைத் தவிசாளரின் சொகுசு வாகனம் மற்றும் அவரின் சகாக்கள் பயணித்த வாகனம் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். (இ-4)

# தனிமைப்படுத்தல் நிலையத்தில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு விமானப்படை தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்த முதியவர் ஒருவர் இன்று காலை சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட போது உயிரிழந்தார்.

குறித்த முதியவர் உயிரிழந்தமைக்கான காரணங்கள் இது வரை வெளியிடப்படாத நிலையில் உடல் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது

குறித்த நபரிற்கு கொரோனா வைரஸ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-4-281)

# சிகை அலங்கரிப்பாளர்கள் மாற்றுத் தொழில்களில்



(வவுனியா)

தற்போதைய சூழ்நிலையில் பலதரப்பட்டவர்களும் தமது தொழிலை இழந்துவரும் நிலையில் வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்களும் வேறு வருமான வழிகளை தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மாறா இலுப்பை கிராமத்தில் வசிக்கும் 218 குடும்பங்களில் பலரது பிரதான தொழில் சிகை அலங்கரிப்பாகும்.

எனினும் தற்போதைய நிலையில் சலூன்கள் மூடப்பட்டுள்ளமையால் தமது அன்றாடத் தொழிலை இழந்து வாழ்வாதாரத்திற்கு பெரும் கஸ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் தமது குடும்பத்தின் அன்றாட தேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு சிறு தோட்டச் செய்கையில் தற்போது ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

எனினும் இவர்கள் அன்றாட வருமானத்தினை அடிப்படையாக கொண்டு தமது ஜீவனோபாயத்தினை செய்து வந்தமையால் தற்போது சிறு தோட்டச்செய்கையை செய்வதற்கும் போதுமான நிதி வசதிகள் இன்மையால் பல்வேறு கஸ்டத்திற்கு மத்தியில் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-4-299)

## (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2027 facebook


**குமார்**

ஊரடங்கு முடிந்து வேலைக்கு செல்லும் போது




என்னையா ஒருத்தர கூட அடையாளம் தெரியல

**சனா**



வீட்டுக்குள்ள இருந்தா bore அடிக்குது
வாசலுக்கு போனா வெயில் அடிக்குது
ரோட்டுக்கு போனா பொலிஸ் அடிக்குது

**ராஜினி**

துட்டு இல்லன்னு கவலப்படுறவங்கள விட



நெட் இல்லன்னு கவலைப்படுறவங்க தான் இப்ப அதிகம்

**குணால்**

உப்பு விக்கப்போனா மழை பெய்யுது , மா விக்க்போனா காத்தடிக்குதுன்னு புலம்பிட்டு இருக்கக்கூடாது



ரெண்டையும் சேத்து போண்டாவா போட்டு வித்திட்டு போய்கிட்டே இருக்கனும்

**மலர்**



சலூன்கள் இல்லாததால் வீட்டில் ஆண்களின் நிலை

**ராமன்**

தொட்டால் பூ மலரும் , தொடாமல் நான் மலர்ந்தேன்



பூ எங்கம்மா மலருது , தொட்டா கொரோனா தான் பரவுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அமெரிக்காவுக்கு மீண்டும் மீண்டும் அதிர்ச்சி கொடுக்கும் கொரோனா



## ஒரே நாளில் 2 ஆயிரத்து 200 பேர் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 201 பேர் பலியாகினர். இதனால் அந்நாட்டில் வைரஸுக்கு பலியானோர் எண்ணிக்கை 63 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 33 இலட்சத்து 7 ஆயிரத்து 652 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 20 இலட்சத்து 34 ஆயிரத்து 410 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரத்து 944 பேரின் நிலைமை மிகவும் கவலைக் கிடமாகவுள்ளது.

வைரஸ் பாதிப்பிலிருந்து 10 இலட்சத்து 39 ஆயிரத்து 168 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய கொரோனாவுக்கு உலகம் முழுவதும் இதுவரை 2 இலட்சத்து 34 ஆயிரத்து 74 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனா ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவை புரட்டியெடுத்து வருகிறது. உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை 8 மணி நிலவரப்படி, அமெரிக்காவில் 10 இலட்சத்து 95 ஆயிரத்து 19 பேருக்கு கொரோனா பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 30 ஆயிரத்து 825 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 201 பேர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்குப் பலியானோர் எண்ணிக்கை 63 ஆயிரத்து 856 ஆக அதிகரித்தது. (இ)

## கொரோனா வைரஸால் வந்த வினை 160 கோடி பேர் வேலையிழக்கும் ஆபத்து

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் பரவி வருவதன் காரணமாக முறை சாரா பொருளாதாரத்தில் 160 கோடி பேர் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக உலக நாடுகள் பலவும் ஊரடங்கை அமுல்படுத்தி இருக்கின்றன. பெரும் பாலான நாடுகளில் மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கிறார்கள். பெரும் பாலான தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. உலக வர்த்தகம் முடங்கிக்கிடக்கிறது.

இந்தத் தருணத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான சர்வதேச தொழிலாளர் அமைப்பு, கொரோனா வைரஸ் பரவி வருகிற சூழலில் தனது மூன்றாவது கண்



காணிப்பு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது.

அதில்இடம்பெற்றிருக்கிற தகவல்கள் தொழிலாளர்கள் இனத்துக்கு எச்சரிக்கை மணி அடிப்பது போலவே இருக்கின்றன.

உலகமெங்கும் உள்ள மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 330 கோடி, அவர்களில் 200 கோடி பேர் முறை சாரா பொருளாதாரத்தின் கீழ்தான் வேலை களை பெற்றிருக்கிறார்கள். இவர்கள்தான் தொழிலாளர் சந்தையில் மிகவும் பாதிப்புக்கு ஆளாகி றவர்கள் என சுட்டிக்காட்டப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவி வருவதின் காரணமாக முறை சாரா பொருளாதாரத்தில் 160 கோடி பேர் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். இதனால் அவர்கள் சம்பாதிக்கும் திறனை இழந்து வருகிறார்கள்.

உலக மொத்த தொழிலாளர்கள் எண்ணிக்கையில் கிட்டதட்ட சரிபாதி அளவுக்கு இருக்கிற இவர்கள் தங்களது வேலைகளையும், வாழ்வாதாரத்தையும் இழக்கிற ஆபத்து, கழுத்தின் மேல் கத்தியாக தொங்கிக் கொண்டிருப்பதை இந்த அறிக்கை படம் பிடித்துக்காட்டுகிறது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

.கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுத்து நிறுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குகளால் சில்லரை மற்றும் உற்பத்தி துறையில் ஈடுபட்டிருந்த 43 கோடிக்கும் அதிகமான நிறுவனங்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி இருக்கின்றன.

. 160 கோடி தொழிலாளர் கள், ஊரடங்காலும், மிகவும் பாதிப்புக்கு ஆளாகி உள்ள துறைகளில் பணியாற்றி வந்ததாலும் முதல் மாதத்திலேயே 60 சதவீத வருமான இழப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். இது ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவில் 80 சத வீதத்துக்கும் அதிகமான சரிவு. ஐரோப்பாவிலும், மத்திய ஆசியாவிலும் 70 சதவீதத்துக்கும் அதிகமான வீழ்ச்சி. ஆசிய, பசிபிக் நாடுகளில் 21.6 சதவீதம் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது.

. பல கோடி தொழிலாளர்கள் வருமானம் இல்லாததால் சாப்பாட்டுக்கு வழியில்லை, பாதுகாப்பு இல்லை, எதிர்காலமும் இல்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். உலகமெங்கும் உள்ள கோடிக்கணக்கான வணிகங்கள் மூச்சு விடவில்லை. அவற்றிடம் சேமிப்பு இல்லை. கடன் வாங்கும் சூழலும் இல்லை என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைவர் குய் ரைடர் பதிவு செய்துள்ளார். இது தான் உலக தொழிலாளர்களின் உண்மை யான முகங்கள். நாம் அவர்களு க்கு இப்போது உதவவில்லை என்றால் அவர் அழிந்து போவார் கள் என்று எச்சரிக்கை மணியும் அடித்துள்ளார்.

. கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடும்போது, இரண்டாவது காலாண்டில் வேலை நேரத்தில் 10.5 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. இது 30கோடி முழு நேர வேலைக்கு சமம். முதலில் கணித்திருந்தது 6.7 சதவீத வேலை நேர சரிவுதான். அதாவது 19 கோடி முழு நேர வேலை இழப்பு தான்.

. இரண்டாவது காலாண்டில் அமெரிக்காவில் 12.4 சதவீத வேலை நேர இழப்பும், ஐரோப்பாவிலும், மத்திய ஆசியாவிலும் 11.8 சதவீத வேலை நேர இழப்பும், மொத்தமாக எல்லா பிராந்தியங்களையும் சேர்த்து பார்த்தால் 9.5 சதவீத வேலை நேர இழப்பும் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

. கடந்த 2 வாரங்களில் ஊரடங்கு போடப்பட்டுள்ள நாடுகளில் வாழும் தொழிலாளர்களின் தேவை 81 சதவீதத்தில் இருந்து 68 சதவீதமாக குறைந்துள்ளது. இது சீனாவில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இருந்தாலும், பிற இடங்களில் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

. சில்லரை, உற்பத்தி, தங்குமிடம் மற்றும் பிற பொருளாதார துறைகளில் இயங்கும் 43 கோடியே 60 லட்சம் நிறுவனங்கள் மிகுந்த பாதிப்பை சந்தித்துள்ளன. இவை சீர்குலைந்து போகும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளன.

இப்படி பல்வேறு கவலை தரத்தக்க அம்சங்கள் இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. (இ)

## ரஷ்ய பிரதமருக்கு கொரோனா அதிர்ச்சியில் உறைந்த மக்கள்



(மொஸ்கோ)

ரஷ்ய பிரதமர் மிக்கைல் மிஷுஸ்டினுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால் அந்நாட்டு மக்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ரஷ்யாவில் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 498 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியது உறுதியானது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 7 ஆயிரத்து 99 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை ஆயிரத்து 73 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் ரஷ்யாவின் பிரதமர் மிக்கைல் மிஷுஸ்டினுக்கும் கொரோனா பரவியது கண்டுபிடிக்கப்பட்டது. 54 வயது நிரம்பிய மிக்கைல் கடந்த ஜனவரி 16 ஆம் திகதி தான் ரஷியாவின் பிரதமராகப் பதவியேற்றார்.

இந்நிலையில் வைரஸ் பாதிப்பு உறுதியானதையடுத்து மிக்கைல் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டார்.

வைரஸ் காரணமாக தனிமைப்படுத்திக் கொண்டாலும் அரசின் கொள்கைகளில் முக்கிய முடிவுகள் எடுக்கும் சமயங்களில் காணொலி மூலம் பங்கேற்பதாக அறிவித்துள்ளார்.

நாட்டின் பிரதமருக்கே கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் ரஷிய மக்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர். (இ)

## கொரோனாவைக் கட்டுப்படுத்த மருந்து தயார் அமெரிக்க நிறுவனம் வெளியிட்ட மகிழ்ச்சி செய்தி

(கலிபோர்னியா)

கொரோனா வைரஸை ரெம்டெசிவிர் மருந்து கட்டுப்படுத்துவதாக கலிபோர்னியாவிலுள்ள கிலியட் என்ற மருந்து நிறுவனம் தெரிவித்தது.

உலக நாடுகளைத் தொடர்ந்து மிரட்டி வரும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் பல்வேறு நாடுகளின் விஞ்ஞானி கள் ஈடுபட்டுள்ளனர். இதில் சில மருந்துகள் சோதனை அடிப்படையிலுள்ளன. சில மருந்துகள் பரிசோதனை செய்யப்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், கொரோனா வைரஸை ரெம்டெசிவிர் மருந்து கட்டுப்படுத்துவதாக ஆய்வில் தெரிய வந்தது. இந்த செய்தியை அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள கிலியட் என்ற மருந்து நிறுவனம் வெளியிட்டது.

இதுபற்றி அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில்:- 'கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு வைரஸுக்கு எதிரான ரெம்டெசிவிர் மருந்து கொடுக்கப்பட்டதில் நல்ல பலன் கிடைத்தது.

முதல் ஐந்து நாட்கள் ரெம்டெசிவிர் மருந்து கொடுக்கப் பட்டது. இரண்டு வாரங்களில் பாதி பேர் குணமடைந்து வீடு திரும்பினர். ரெம்டெசிவிர் மருந்தின் மூன்றாவது பரிசோதனைதான் இறுதியானது. மருந்துக்கான அனுமதி பெறுவதற்கான இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளோம்" என்று தெரிவித்தது.

இந்த ஆய்வு முடிவுகளை தேசிய அலர்ஜி மற்றும் தொற்று நோய்கள் நிறுவனம் (என்.ஐ.ஏ.ஐ.டி) மதிப்பீடு செய்து தகவல் வெளியிட்டது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், மற்ற மருந்துகளை விட கிலியட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மருந்து 31 சதவீதம் கூடுதல் பலனை அளித்துள்ளது.

மற்ற வைரஸ் தடுப்பு மருந்துகளைக் கொடுக்கும்போது சராசரியாக 15 நாட்களில் நோயாளிகள் குணமடைகின்றனர். ஆனால் ரெமடெசிவிர் மருந்தால் 11 நாட்களில் நோயாளி குணமடைந்துள்ளார் என்றும் என்ஐஏஐடி தெரிவித்தது.

என்ஐஏஐடி தலைவர் அந்தோனி பாயுசி கூறுகையில்"நோயாளிகளை மீட்பதற்கான நேரத்தைக் குறைப்பதில் ரெம்டெசிவிர் ஒரு தெளிவான, குறிப்பிடத்தக்க, நேர் மறையான விளைவைக் கொண்டிருப்பதாக தரவுகள் காட்டுகின்றன. 31 சத விகித முன்னேற்றம் என்பது, 100 சதவிகிதம் நாக் அவுட் போல் தெரியவில்லை என்றாலும் தற்போதைய முன்னேற்றம் மிக முக்கியமானது. ஏனென்றால் இந்த மருந்தால் வைரஸை தடுக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது." எனத் தெரிவித்தார். (இ)

# ஊரடங்கு வேளையில் சாவகச்சேரிக்கு வந்த எம்பிலிப்பிட்டிய முதியவரால் பெரும் பதற்றம்

## கடல் வழியாக வந்திருக்கலாம் என மக்கள் சந்தேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அமைந்துள்ள புனித லிகோரியார் தேவாலயத்திற்கு அருகாமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை எம்பிலிப்பிட்டியப் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் வந்ததனால் அப்பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் முதியவர் ஒருவர் மேலாடையின்றி சாவகச்சேரி - கச்சாய் கடற்கரையிலிருந்து சேறு படிந்த கால்களுடன் நடந்து வந்தார். பின்னர் அருகாமையிலுள்ள சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் நெடு நேரமாக இவர் உட்கார்ந்து இருந்தமையால் சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள் விசாரணையில் ஈடுபட்டனர்.

விசாரணையின் போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்த மக்கள் இது தொடர்பாக அருகிலுள்ள படைத் தலைமையகத்திற்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட படையினர், குறித்த முதியவரை உடனடியாக அவ்விடத்திலிருந்து அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று விசாரணையை நடத்தினர். விசாரணையின் போது எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என்பதை மாத்திரமே அறிய முடிந்ததாகவும் வேறு விபரங்கள் எதனையும் அவரிடமிருந்து பெற முடியவில்லை எனவும் வைத்தியசாலை மற்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக அவரை அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உரிய மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

குறித்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வந்ததனால் வைத்தியசாலை வளாகத்தில் தொற்று நீக்கிகளை விசிறி தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

இதனால் பொது மக்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் கொரோனா அச்சம் மேலும் தீவிரமடைந்தது. குறித்த முதியவர் எப்போது, எவ்வாறு சாவகச்சேரிக்கு வந்தார் என்பது தொடர்பான விசாரணைகள் நடந்த வண்ணமுள்ளன.

குறித்த முதியவர் கடல் வழியாக வந்திருக்கலாம் எனவும் வேறு சிலர் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பித்து வந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டனர். (இ-30)

# சகல தொழில்களையும் பாதுகாப்போம்; வாழ்வதற்கான உரிமையைக் காப்போம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

உலகில் மில்லியன் கணக்கான வேலை செய்யும் மக்களுக்கான தினமாக மே தினமானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. பில்லியன் கணக்கான மக்கள் வீட்டுக்குள் அடைபட்டு ,ருக்கவேண்டிய சூழ்நிலை ஒன்றிலேயே இந்த வருட மே தினம் உதயமாகியிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேதினத்தை முன்னிட்டு அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா அனர்த்தத்தின் மூலமாக உலகத்தின் இருப்பான நிலையானது அசாதாரண நிலையாக மாறியிருக்கின்றது. எனினும் இந்த அசாதாரண சூழ்நிலையில் கூட தமது உயிரைப் பணயம் வைத்து வேலை செய்கின்ற பாரிய அளவிலானவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு எனது மரியாதையைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

நாள் சம்பளத்தில் வாழ்க்கையை நடத்துபவர்கள், போக்குவரத்து சேவை பணியாளர்கள், துறைமுகம் சார்ந்த சுய தொழிலில் ஈடுபடுகின்ற பணியாளர்கள், புடைவை உற்பத்திப் பணியாளர்கள், மத்திய கிழக்கு பணியாளர்கள், அபிவிருத்தித் துறையின் பணியாளர்கள், சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் விவசாயத்துறையின் விற்பனையில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதனால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் விவசாயிகள், தேயிலை மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்கள், கடற்றொழிலாளர்கள், வியாபாரிகள் உட்பட அனைத்து வேலைசெய்யும் மக்களும் தற்போது பாரிய சிக்கலுக்கு முகம் கொடுத்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் வாழ்வதற்கான உதவியையும் வசதிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எமது தாய் நாட்டின் நலனுக்காகப் பாரியளவில் அர்ப்பணிக்கின்ற, வியர்வை சிந்துகின்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போதைய நிலையில் உலகம் முழுவதிலும் வாழ்க்கை நிலை பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன் எதிர்காலத்தில் பொருளாதார தொழில் ரீதியான பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதாக அடையாளங்கள் காணக் கிடைக்கின்றன.

இவ்வாறான நிலையில் ஒட்டுமொத்த வேலை செய்யும் மக்களின் முன்பும் எதிர்காலம் குறித்த கேள்விகள் காணப்படுகின்றன.

அந்த வகையில் இந்த மே தினம் மற்றைய மே தினங்களிலும் பார்க்க மக்களின் வாழ்க்கையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமையலாம்.

ஆயிரக் கணக்கிலான வேலைகள் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் உருவாகியிருப்பதுடன் வாழ்வதற்கான போராட்டம் பாரிய போராட்டமாக மாறியிருக்கின்றது. தொழில்களைப் பாதுகாப்போம் வாழ்வதற்கான உரிமையைப் காப்போம் என்பது இவ்வருட மே தினத்தின் கருப்பொருளாக அமையவேண்டும் என்பது எனது கூற்றாகும்.



வேலை செய்கின்ற அனைத்து மக்களுக்காகவும் உயர்வு, தாழ்வு, சாதி, இன, கட்சி பேதங்கள் பாராது செயற்பட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்படுகிறது. நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு எல்லா நாட்களிலும் முயற்சிகளை மேற்கொள்கின்ற தொழிலாளர்களுக்கு தற்போது கொரோனாவுக்கும் எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே தொழிலாளர்கள் உட்பட அனைத்துப் பிரஜைகளுக்கும் இந்த அனர்த்த நிலையில் தமது வாழ்வை கொண்டு செல்வதற்கு பொருத்தமான பொருளாதார நிலையை உருவாக்கிக் கொடுப்பது அரசாங்கத்தால் புறந்தள்ளி விடாது மேற்கொள்ள வேண்டிய விடயமாகும். அவர்களுக்காக நன்றிக்கடன் பாராட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்தச் செயற்பாட்டு அரசியல் மயமாக்கல் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். இதற்காக வேண்டிக் கொள்வதுடன் தாய்நாட்டின் அனைத்து வேலைசெய்யும் மக்களுக்கும் நோய்கள் அற்ற நிலை உருவாக பிராத்திக்கின்றேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (இ)

# இன ரீதியாக இலக்குவைத்து பழி சுமத்தும் பிரசாரங்கள்

## ஹக்கீம் கடும் விசனம்



(கொழும்பு)

கோவிட் - 19 தொற்று நோய் நிலைமை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதோடு, இன ரீதியாக இலக்குவைத்து ஒரு சமூகத்தின் மீது பழி சுமத்தும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழ்நிலையில், நாட்டில் குறிப்பாக தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடும் விசனம் வெளியிட்டார்.

மே தினத்தை முன்னிட்டு ஹக்கீம் வெளியிட்ட அறிக்கையில்,

இஸ்லாம் தொழிலாளர்களின் உரிமைகளைச் சரிவர வழங்கியிருப்பதனால், முஸ்லிம் காங்கிரஸ் ஆண்டு தோறும் மே தினத்தைக் கொண்டாடுவதை வழக்கமாகக் கொள்ளவில்லை.

கோவிட் - 19 நோய்த் தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பின்மை, பணிக் குறைப்பு, சம்பளம் வழங்கப்படாமை போன்ற பல்வேறு காரணிகளால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை கோவிட் - 19 விவகாரம் கையாளப்படும் விதம் நிலைமையை மிகவும் சிக்கலாக்கியுள்ளது. அரசியல் உள்நோக்கங்களோடு, நோய் பரவல் பற்றிய அச்ச உணர்வு மேலோங்கியுள்ளதாகத் தோன்றுகிறது.

குறிப்பாக முஸ்லிம்கள் செறிவாக வசிக்கும் அக்குறணை, அட்டுலுகம போன்ற பிரதேசங்களில் ஓரிருவர் கோவிட் - 19 தொற்றினால் பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டதற்காக, அவ்வாறான பிரதேசங்களிலிருந்து ஏராளமானோர் தனிமைப்படுத்தல் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அக்குறணையில் 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிப்போர் முடக்கப்பட்டுள்ளதனால் அங்குள்ளோரின் வாழ்வாதாரம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் தனவந்தர்கள் வழங்கிவரும் நிவாரண உதவிகளைத் தவிர அரசாங்கத்தினால் உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

நாட்டில் பொதுவாக அரசாங்கத்தால் வழங்கப்படுவதாகக் கூறப்படும் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவுக்காக அப்பாவி பொதுமக்கள் தங்களது தன்மானம், சமூக அந்தஸ்து என்பனவற்றை இழந்து நீண்ட வரிசைகளில் கால் கடுக்க தவம் கிடக்க வேண்டிய நிலைமை ஊடகங்களில்கூட சர்வசாதாரணமகக் காண்பிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் சர்ச்சைக்குள்ளாகி சட்டம் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடிக்குள் நாடு சிக்குண்டுள்ள நிலையில் கோவிட் - 19 நோய் நிலைமையை அரசியல் உள்நோக்கங்களுடனும், இனவாதச் சிந்தனையுடனும் தொடர்ந்து அணுகுவது நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பையே சீர்குலைத்துவிடும் அபாயத்தை ஏற்படுத்தும்.

அத்துடன் தொழில் இழப்பு வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றின் விளைவாக பொது மக்களின் வாழ்வாதாரம் முன்னெப்போதும் இல்லாதவாறு பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இந்தியாவில் 35 [illegible] கொரோனா பாதிப்பு-ப[illegible]



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தை நெருங்கியது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வைரஸ் அதி வேகமாக பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இறப்பு விகிதமும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 34 ஆயிரத்து 752 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1147 ஆக உயர்ந்தது. 8 ஆயிரத்து 889 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனா வைரஸ் சீன ஆய்வு கூடத்தில்தான் உருவாக்கப்பட்டது என்பதற்கான ஆதாரமுள்ளது

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பரபரப்புத் தகவல்

(வோஷிங்டன்)

சீனாவின் வுஹான் நகரிலுள்ள ஆய்வு கூடத்தில் தான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டது என்பதற்கான போதிய ஆதாரம் உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா அமெரிக்காவை புரட்டியெடுத்து வருகிறது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் அமெரிக்கா தான் முதலிடத்தில் உள்ளது.



நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, அந்நாட்டில் 10 இலட்சத்து 94 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. வைரஸ் தாக்குதலுக்கு 63 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

சீனாவிலுள்ள ஹூபேய் மாகாணம் வுஹான் நகரிலுள்ள ஒரு சந்தைப் பகுதியிலிருந்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்காவை குறிவைத்தே கொரோனா வைரஸ் வுஹான் நகரிலுள்ள ஆய்வு கூடத்தில் உருவாக்கப்பட்டதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கொரோனா வைரஸ் தொடர்பாக வோஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது ,

வுஹான் நகரிலுள்ள வைராலஜி நிறுவனத்தில் இருந்துதான் கொரோனா வைரஸ் பரவியிருக்கிறது என்பதற்கான ஆதாரம் உள்ளதா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ட்ரம்ப், ' ஆம், கொரோனா வுஹான் ஆய்வு கூடத்தில் உருவாக்கப்பட்டதற்கான போதிய ஆதாரம் உள்ளது' எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, எப்படி இவ்வாறு உறுதியாகக் கூறுகிறீர்கள் என ஊடகவியலாளர்கள் மீண்டும்



பதில் கேள்வி எழுப்பினர். அதற்கு உடனடியாக, "அந்த விபரத்தை உங்களிடம் தற்போது கூற முடியாது' என மறுத்து விட்டார்.

மேலும், இந்த விவகாரத்தில் சீனா மீது கடுமையான பொருளாதாரத்தடைகளை விதிக்கவுள்ளதாக ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். (இ)

# கொரோனாவுக்கு எதிரான போரில் சீனா மிகப்பெரிய சாதனை!

## ஜனாதிபதி ஜின்பிங் பெருமிதம்

(பீஜிங்)

கொடிய கொரோனாவுக்கு எதிரான போரில் சீனா மிகப் பெரிய சாதனை படைத்தது என்று அந்நாட்டு ஜனாதிபதி ஜின்பிங் தெரிவித்தார்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் சீனாவில் முதலில் தோன்றினாலும் சீனா எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்கு இயல்புநிலை திரும்பி வருகிறது.

நேற்று முன்தினம் மேலும் 4 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 862 ஆக உயர்ந்தது. புதிதாக யாரும் உயிரிழக்கவில்லை. அதனால் பலி எண்ணிக்கை 4 ஆயிரத்து 633 ஆக நீடிக்கிறது.

சீன நாடாளுமன்றத்தின் வருடாந்த கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் நடைபெறயிருந்தது. ஆனால் கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் அப்போது ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தொடர் எதிர்வரும்



22 ஆம் திகதி ஆரம் பிப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தொடர் குறுகிய காலம் நடைபெறக்கூடும். காணொலி காட்சி மூலம் நடக்க வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுவதையொட்டி, ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில்,ஜனாதிபதி ஜின்பிங் பங்கேற்றார். இக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

கொரோனாவுக்கு எதிராக நாடு முழுவதும் நடந்த போரில், சீனா மிகப்பெரிய போர்த்திற சாதனை படைத்தது. சீனாவின் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைத்தது.

இருப்பினும், வுஹான் நகரம் அடங்கிய ஹூபேய் மாகாணத்தில் சமுதாய பரவல் நிலையை எட்டிவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

ரஷ்யாவை ஒட்டிய ஹெய்லாங்ஜியாங் மாகாணத்தில், ரஷ்யாவிலிருந்து திரும்பிய சீனர்களுக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டது. அங்கும் அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டும். சிறு, குறு தொழில்களுக்கு புத்துயிரூட்ட வேண்டும். வாகன உற்பத்தி தொழில்கள், மின்னணு பொருட்கள் உற்பத்தி தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்.

வேளாண் உற்பத்தியை ஊக்குவித்து, விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கஷ்டப்பட்டு படைத்த சாதனைகளைப் பாதுகாக்கும் வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகளில் எந்தத் தளர்வும் இருக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

# பாக்.சபாநாயகருக்கு கொரோனா



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாடாளுமன்ற சட்டகீழவையின் சபாநாயகர் அசாத் குவைசருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட அசாத் மற்றும் அவரது குடும்பத்தினரும் வீட்டில் தங்களைத் தாங்களாகவே தனிமைப்படுத்திக் கொண்டனர்.

மேலும், அவரது மகன் மற்றும் மகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் பாகிஸ்தானிலும் வேகமாகப் பரவி வருகிறது. அந்நாட்டில் நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி 16 ஆயிரத்து 473 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. 361 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையே, வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள அசாத் குவைசர் கடந்த 24 ஆம் திகதி பிரதமர் இம்ரான்கானை சந்தித்தார்.

இதனால் இம்ரான்கானுக்கும் கொரோனா வைரஸ் பரவியிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (இ)

# கினியாவில் பிரதமர் உள்ளிட்ட 4 அமைச்சர்களுக்கு கொரோனா

(பிசாவு)

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் பிரதமர் நுனோ கோம்ஸ் நபியம் மற்றும் அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

அங்கு இதுவரை 205 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனாவுக்கு பலியாகினார்.

கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் நபியம் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இறுதியில் வெற்றியாளரான ஜனாதிபதி உமரோ சிசோகோ எம்பலோவால் கடந்த பெப்ரவரி மாதம் பிற்பகுதியில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொரோனா தொற்று உறுதியான பிரதமர் நபியம், அந்நாட்டின் உள்துறை அமைச்சர் போட்சே கேண்டே மற்றும் இரு அமைச்சர்களும் தலைநகர் பிசாவுவிலுள்ள ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டதாக சுகாதாரத்துறை அமைச்சர் டியூனா தெரிவித்தார்.

கினியா நாட்டில் இதுவரை 205 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன் 19 பேர் குணமடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(இ)



# கொரோனா வைரஸை எதிர்கொள்வதில் உலக நாடுகளிடையே பிளவுபட்ட நிலை

## தலைமைத்துவம் இல்லையென ஐ.நா. கவலை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்றை எதிர்கொள்வதில் சர்வதேச நாடுகளிடையே ஒரு பிளவுபட்ட நிலையையே காணமுடிந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டதுடன் கொரோனாவை எதிர்கொள்வதில் சரியான தலைமை இல்லையெனவும் சுட்டிக்காட்டியது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் தெரிவிக்கையில்,

கொரோனாவை எதிர்கொள்வதில் சர்வதேச நாடுகளிடையே ஒரு பிளவுபட்ட நிலையையே



காணமுடிந்துள்ளது. கொரோனாவை எதிர்கொள்வதில் சரியான தலைமை இல்லை.அங்கே தலைமைக்கு பற்றாக்குறையைத்தான் காணமுடிந்தது.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் சர்வதேச நாடுகள் ஒன்றுபட்டிருப்பது முன்னெப்போதும் விட முக்கியமானது.

அதே சமயத்தில் ஒரு சரியான தலைமை இல்லாத நிலையில் அந்த இடம் பிளவுபட்டுள்ளது.

தலைமைப் பதவிக்கும் அதிகாரத்துக்கும் இடையே ஒரு துண்டிப்பு காணப்படுகின்றது. தலைமைத்துவத்துக்கு நாம் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளைப் பார்த்துள்ளோம்.

ஆனால் அது பொதுவாக அதிகாரத்துடன் தொடர்புடையவை இல்லாமல் இருந்தது. நாம் அதிகாரத்தைக் காணும் இடத்தில் சில சமயங்களில் தேவையான தலைமையைக் காணமுடியவில்லை எனக் கவலை வெளியிட்டார். (இ)

# வடக்கிலுள்ள கல்வி நிலையங்களை தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றும் நடவடிக்கையை கைவிடுக

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றுள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் படையினரை வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையங்களில் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவந்த செய்தியையடுத்து அந்த நடவடிக்கையை உடன் கைவிடுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்:- இலங்கையில் கொரோனாவைரஸ் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரசாங் கம் நடவடிக்கை எடுக்கத் தொட ங்கி ஏறத்தாழ 50 நாட்கள் கடந்து விட்டன.

பல்வேறுபட்ட மாவட்டங்களில் தொடர் ஊரடங்குகளும் நடைமுறையில் இருந்துவருகிறது. இலங்கையின் பல பாகங்களிலும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளானவர்களை அல்லது அந்த நோய்த் தொற்றுள்ளவர்களுடன் தொடர்புடையவர்களை கண்காணிப்பதற்காக தனிமைப்படுத்தல் முகாம்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பல்வேறுபட்ட இராணுவ முகாம்களும் கடற்படை முகாம்களும் விமானத்தளங்களும் இத்தகைய தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்றியமைக்கப்பட்டன.

இவ்வாறான முகாம்களில் மிகப் பெருமளவில் கொரோனா வைரஸ் தாக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் தென்பகுதியிலிருந்து அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்து இலங்கையை வந்தடைந்த பிரயாணிகளுக்கும் இத்தகைய தொற்றுக்கள் உள்ளனவா என்பதை அவதானிப்பதற்காக அவர்களும் அங்கே கொண்டுவரப்பட்டனர். இவ்வாறான முகாம்களை வடக்கிலோ கிழக்கிலோ ஏனைய மாகாணங்களிலோ அமைக்கும்போது படையினர் எடுத்தமுடிவா? துறைசார் வைத்திய நிபுணர்கள் எடுத்த முடிவா? என்ற கேள்வி எழுகின்றது.

இப்பொழுது கொரோனா நோய் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக ஒருசில இராணுவ, முகாம்களும் கடற்படை முகாம்களும் மூடப்பட்டிருப்பதாக அறிகின்றோம். அதனால் கொரோனா தொற்றுக்குள்ளான படையினரைத் தனிமைப்படுத்தி வைத்திருக்க இப்பொழுது புதிய முகாம்களை படையினர் தேடிவருவதைப் பார்க்க முடிகின்றது.

கோப்பாய் கல்வியியற் கல்லூரி, வவுனியா மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியா லயம் போன்ற பல பாடசாலைகள் படையினரைத் தனிமைப்படுத் தும் முகாம்களாக அடையாளப்படுத்தப்பட்டன. இதேபோன்று தென்னிலங்கையிலும் ஒரு சில பாடசாலைகளை கையகப்படுத்தி யிருக்கலாம். ஆனால் இத்தகைய கல்வியியற் கல்லூரிகளும் பாடசாலைகளும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உரு வாக்கப்படுவதை அப்பிரதேச மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அரசின் இந் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்கள் தெளிவாகக் காட்டுகின்றது.

இந்நடவடிக்கைகள் படையினரால் தன்னிச்சையாகவே மேற்கொள்ளப்படுகின்றனவா? என்ற கேள்வி எமக்கு எழுகிறது. ஆகவே பொலிஸாரைக் குவித்து பதற்றமான சூழலை உருவாக்கி இத்தகைய தனிமைப்படுத்தல் முகாம்களை அமைப்பதை அரசாங் கம் கைவிட வேண்டும் என்று கோருகின்றோம்.

கொரோனாத் தொற்று ஆரம்பித்தகாலத்தில் இருந்து வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்க ளும் கொரோனாத் தொற்று அற்ற மாவட்டங்களாகவே இருந்தது. பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த கொரனோதொற்றாளர் கள் கண்டு பிடிக்கப்பட்டு அதுவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கடந்த இரண்டு வாரங்களாக யாழ்ப்பாணத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் என எவரும் இனங்காணப்படவில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளட க்கிய வடக்கு மாகாணமானது கொரோனா அச்சத்திலிருந்து ஓரளவிற்கு விடுபட்டு மீளும் நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கத்தின் புதிய தனிமைப்படுத்தல் முகாம்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையானது, மீண்டும் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இதே போன்று நுவரெலியா மாவட்டம் மற்றும் வேறு சிலமாவட்டங்களும் கொரோனாத் தொற்று ஏற்படாத மாவட்டங்களாக உள்ளன. எனவே இவ்வாறான மாவட்டங்களுக்கோ மாகாணங் களுக்கோ சென்று வருபவர்களை மாகாணத்தின் எல்லையிலோ மாவட்டத்தின் எல்லையிலோ பரிசோதனை செய்து அனுப்புவதனூடாக பகுதி பகுதியாக கொரோனாத் தொற்று அற்ற பிரதேசங்களை உருவாக்க முடியும் என்பது எங்கள் கருத்து.

மாவட்ட ரீதியாகவோ மாகாண ரீதியாகவோ கொரோனா அற்ற மாவட்டங்களை இனங்கண்டு அந்தமாவட் டங்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப் புவது என்பது ஒரு சிறப்பான நடவடிக்கையாக இருக்கும்.

அதனைவிடுத்து, கொரோனா அச்சம் குறைவடைந்து செல்லும் மாவட்டங்களில் மீண்டும் இத்தகைய தனிமைப்படுத்தும் முகாம்களைத் திறந்து நோய்த் தொற்றாளர்களைக் கொண்டு வந்து வைத்திருப்பது ஏற்புடையது மல்ல, ஆரோக்கியமானதுமல்ல. கொரோனா தொற்று நோயை அழிப்பதை வெறுமனே ஓர் இரா ணுவ நடவடிக்கை போன்று பார்க்காமல் அரசாங்கம் அந் தந்த மாவட்டம் மற்றும் மாகாண ங்களில் உள்ள வைத்திய நிபுணர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வதே உகந்ததாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர். செல்லத்துரை சின்னையா



[illegible] 31 ஆம் நாள் நினைவு தினம் 02.05.2020 இன்று சனிக்கிழமையாகும்.

அன்னாரின் மரண நிகழ்வுகளின் பொழுது இக்கட்டான சூழ்நிலைகளிலும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

குருந்தடிப்பிள்ளையார் கோவிலடி, சுதுமலை- தெற்கு, மானிப்பாய்.

மனைவி (சி.சந்திராதேவி), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

02.05.2020
சித்திரை19, சனிக்கிழமை
நவமி காலை 7.01 மணிவரை
தசமி காலை 7.02 மணி தொடக்கம்
மகம் முன்னிரவு 7.30 மணிவரை
சுபநேரம்- 2.57 - 4.27 மணிவரை
இராகுகாலம்- 8.57 - 10.27 மணிவரை
சந்திராஷ்டமம்-திருவோணம், அவிட்டம்
அமிர்தசித்தம்



**மேஷம்** — பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன நன்மையுண்டு, தனித்த சுபாவமுண்டு, வழிபாடு திருப்திதரும் வகையில் அமையும்.



**ரிஷபம்** — தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சுப காரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



**மிதுனம்** — நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் நாள், இழுபடியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப் பணிகளில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு



**கடகம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.



**சிம்மம்** — அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச்சுமை கூடும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**கன்னி** — மனதில் இனம்புரியாத சந்தேகங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப விரயங்கள் கூடும் நாள்.



**துலாம்** — எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வருவர், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.



**விருச்சிகம்** — பிறர் உதவியுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**தனுசு** — குடும்பத்தினருக்கிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றி முன்னேற்றமும் காண்பீர்கள்.



**மகரம்** — சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினர் இடையே சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், பொறுமையால் பெருமை காண வேண்டி நாள்.



**கும்பம்** — மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்வீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சாஸ்திர நன்மையுண்டு, போசன சுகமுண்டு.



**மீனம்** — உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

நேர்மையான பார்வைக்கு பல தவறுகள் மறையும்.